# பண்டிதமணி

# பண்டிதமணி

## வாழ்க்கைச் சித்திரம்

விசு. திருநாவுக்கரசு

புதுக்கோட்டை.

முதற்பதிப்பு: 1944

பதிப்புரிமை

தமிழன்னை நிலையம்
புதுக்கோட்டை

விலை ரூ 1—4—0

# பதிப்புரை

நிலவிவரும் புலவர்களுள்ளே தமிழ் பலருக்குப் பெருமை தந்தது. தமிழுக்குப் பெருமை தந்தனர் சிலர். அச்சிலருள் ஒருவர் பண்டிதமணி. பண்டிதமணி தமிழன்னையின் மணிமுடியென விளங்குபவர். அவரது பேராற்றலைத் தமிழகம் நன்குணரும்.

இத்தகைய புலவர்மணிக்கு வாழ்க்கைச் சித்திரம் அமைக்க நாங்கள் எண்ணினோம். சித்திரம் அமைக்கத் தமிழ்த்திறன் மிக்க வித்துவான் திரு. விசு. திருநாவுக்கரசு அவர்கள் வாய்த்தனர். பண்டித மணியோடு மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவர்கட்கு வாய்த்தது. அதன் மலர்ச்சியே இந்நூல்.

வாழ்க்கைச் சித்திரம் வளர்ந்துவரும் தமிழிற்குப் புதுவகை இலக்கியம். ஆனால் மிக இன்றியமை

யாததுங்கூட. இச்சித்திரத்தைத் தீட்டுவதில் ஆசிரியர் பெருவெற்றி அடைந்துள்ளார். அவர்க்கென அமைந்துள்ள தெள்ளிய இனிய நடை வெற்றியை இரட்டிப்பாக்குகின்றது. இந்நூல் அவர் தம் எழுத்தாற்றலை நன்குகாட்டும். இளமையிலே புலமை மிக்க இவ்வாசிரியர் எங்கள் வேண்டுதலுக்கிசைந்து இந்நூலை எழுதித் தந்தமைக்கு அன்பொடு கலந்த நன்றி.

நூலின் சிறப்புக்குக் காலூன்றும் வகையில் முன்னுரை தந்தருளிய வீரத்திரு (Sir) R. K. சண்முகம் செட்டியார் Kt. K. C. I. E. அவர்கட்கும், வாழ்த்துப் பாடல்கள் இயற்றியளித்த கவிமணி திரு. தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

புதுக்கோட்டை
19—7—44 } தமிழன்னை நிலையத்தார்

# வாழ்த்து

**கவிமணி திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்**

ஆரா வமுத மனைய தமிழுக்கோர்
பேரா சிரியனெனப் பேர்பெற்றோன்—சீராரும்
கண்ணுதலுக் கன்பன் கதிரேசன் என்றென்றும்
மண்ணுலகில் வாழ்க மகிழ்ந்து. 1

பள்ளிப் படிப்பறியான் பைந்தமிழு மாரியமும்
தெள்ளிச் சுவைதேரும் செந்நாவான்-உள்ளிநிதம்
சித்தம் சிவன்பால் செலுத்தும் கதிரேசன்
நித்தம் வளர்க நிலத்து. 2

எங்கும் நிறைபொருளாய் எப்பொருட்கும் அப்பாலாய்த்
தங்கும் தனிப்பொருளின் தண்ணருளால்—பொங்குபுகழ்ச்
செந்தமிழ்த் தாய்பெற்ற செல்வன் கதிரேசன்
சந்ததமும் வாழ்க தழைத்து. 3

## வேறு

சிந்தைக்கினிய செவிக்கினிய திருவாசகத்தி னுட்பொருளை
முந்துமறிவா லாராய்ந்து முத்தேவர்க்கு முதற்றேவன்
எந்தைசிவனே யாமென்ன எவர்க்கும் நன்றாய் எடுத்தோத
வந்தபெரும்பே ராசிரியன் வாழ்கவாழ்க வாழ்கவே. 4

இனியதமிழைச் செந்தமிழை என்றும்ஓங்கி வளர்தமிழை
கனியுமன்பு மிகஇளைஞர் கற்றுநெஞ்சம் களிப்பெய்தப்
புனிதமுறையில் போதனைசெய் புலவர்பெருமான்கதிரேசன்
நனியிவ்வுலகில் வாழவரம் நங்கைபாகன் நல்குகவே. 5

ஆரியத்தின் நிலைகண்டோன் அரியதமிழின் கடலானோன்
பாரிஅண்ண மலைமன்னன் பரிந்துபோற்று முதுபுலவன்
தேருமினிய சொல்லாலெம் சிந்தைகவரும் கதிரேசன்
பேரும்புகழும் பெருவாழ்வும் பெற்றுநிதமும் வாழ்கவே. 6

நெற்றிநிறைந்த நீறுடையான் நெஞ்சில்பஞ்சாக் கரமுடையான்
முற்றிமுதிரும் அன்பாலே மூவர்தமிழும் பயில்நாவான்
சுற்றம்தழுவும் குணசீலன் தூயநெறிகண் டொழுகிடுவான்
கற்றபெரியோன் கதிரேசன் கடவுளருளால் வாழியவே. 7

# முன்னுரை

வீரத்திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள்

Kt. K. C. I. E.

வித்துவான் திருநாவுக்கரசு அவர்கள், பண்டிதமணியைப் பற்றிய அழகிய வாழ்க்கைச் சித்திரத்திற்கு, நான் ஒரு முகவுரை எழுதவேண்டுமென்று என்னைக்கேட்டார். பண்டிதமணியைப்பற்றிய ஒரு புத்தகத்திற்கு முகவுரை எழுதுவதும் பெருமை என்றெண்ணி நானும் ஒப்புக்கொண்டேன்.

ஆங்கில ஆசிரியரான 'பர்க்' (*Burke*) என்பவரைப் பற்றி 'ஜான்சன்' (*Johnson*) பேசும்போது 'நீ தெருவில் போய்க்கொண்டிருக்கும் சமயம், திடீரென்று மழை பெய்து, ஒரு திண்ணைத் தாழ்வாரத்தில் தங்கும்போது அந்த இடத்தில் உன்

போலவே 'பர்க்கும்' வந்து நின்று அவரு டன் ஐந்து நிமிடம் பேச நேரிட்டால், இவர் யாரோ ஒரு மகான் என்று உனக்கு உடனே தோன்றும்' என்றூர். பண்டித மணியை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நான் முதன்முதல் சந்தித்தபோது,எனக்கும் அவரைப்பற்றி இம்மாதிரியான எண்ணமே தோன்றியது. அந்தச் சிறிய நேரத்தில் பண்டிதமணியின் பெருமை எனக்குப் புலப் பட்டது.

சென்ற 25 ஆண்டுகளுக்குள், தமிழ் மக்களிடையில் ஒரு புதிய கலையுணர்ச்சி யும், ஆர்வமும் தோன்றிமறைந்து, வாடி யிருந்த தமிழ்க்கலை மறுமலர்ச்சி பெற்றது. இந்த மறுமலர்ச்சிக்கு முக்கியமான சில பெரியார்களின் பெயர்கள் நினைவுக்கு வரு கின்றன-மறைமலையடிகள், கா. நமச்சிவாய முதலியார், உ. வே. சாமிநாதையர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டி. கே. சிதம்

பர்நாத முதலியார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார்என்பவை அப்பெயர்கள். தமிழ்க் கடவுளாகிய முருகக் கடவுளின் ஆறு முகங்கள்போல, இந்த ஆறு தமிழ்ப் பெரியார்களும் நம்முடைய கலை வளர்ச்சியில், தமிழ் மக்களில் ஊக்கத்தைக் கொடுத்தவர்களில் முதன்மையானவர் என்று சொல்ல வேண்டும்.

பெரியார்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றி அறிந்துகொள்வதில் கலையுணர்ச்சியுள்ளவர்களுக்கு மிகுந்த ஆசையுண்டாவதுவழக்கம். பள்ளிக்கூடத்திலும், பல்கலைக் கழகத்திலும் படியாமல், தம்முயற்சியினுலேயே 'பண்டிதமணி' என்னும்பட்டம் பெறும்வண்ணம் புலமைபெற்ற ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றித் தெரிய வேண்டுமென்று தமிழ்மக்களுக்கு விருப்பமுண்டாவதில் ஆச்சரியமில்லை.


திருநாவுக்கரசு அவர்கள், இந்தச்சிறிய புத்தகத்தில், பண்டிதமணியின் வாழ்க்கை

நிகழ்ச்சிகளை அழகாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். 51 பக்கம்கொண்ட இந்தச் சிறிய புத்தகத்திற்கு 'வாழ்க்கைச் சித்திரம்' என்று பெயர் கொடுப்பது மிகவும் பொருத்தமாகும். இதைப் படிக்கும்போது பண்டிதமணியின் உருவத்தை ஒரு ஓவியத்தில் காண்பதுபோல நாம் காண்கிறோம்.

'பண்டிதமணியார்க்கு இரண்டில் விருப்பம். ஒன்று காவியம்; மற்றொன்று காரமில்லாத உணவு' என்று படிக்கும் போது பண்டிதமணியின் உருவம் படிப்பவர் கண்முன் தோன்றுகின்றது. காவியச்சுவை, உணவுச் சுவை இவை இரண்டல்லாமல், நகைச் சுவையையும் பண்டிதமணி நிரம்ப அனுபவிப்பவர் என்பது இந்தச் சித்திரத்தால் விளங்குகின்றது. திருநாவுக்கரசு அவர்கள், இந்தப் புத்தகத்தில் கையாண்டிருக்கும் வசன நடை எளிதாகவும், இலக்கிய அழகு பொருந்தியதாகவும் இருக்கின்றது.

கோவை
29—2—44

சண்முகம் செட்டியார்.



# பண்டிதமணி

தமிழ்நாட்டினர் ஒரு பெரும் புலமையாள ரைப் பொதுவாகப் பண்டிதமணி என்கின் றனர். சிறப்பாக அவர் யார் என்று கேட் டால் பலர் பலவாறு சொல்கின்றனர்.

பண்டிதமணியார் என அவரது பட்டத் திற்கு ஒரு 'ஆர்' என்ற சிறப்பு விகுதி யைக் கொடுத்துப் பாராட்டுவர் தமிழ்நாட் டுப் பாவலர். அந்த 'ஆர்' விகுதியை 'யார்' என வினாவாக்கி அவ் வினாவிற்கு விடையை நாம் சிலரிடம் கேட்டு வைப்போம்.

ரயில்வசதி, கார் வசதியில்லாமல், கால்வசதி அல்லது கட்டைவண்டி வசதியினால்தான் மகிபாலன்பட்டிக்குப் போகமுடியும். அந்த ஊரில்தான் பண்டிதமணி வாழ்கிறார்.

அவர் வீட்டுக்குள் சென்று அவரது தாய் தந்தையரைக் கேட்டால் **கதிரேசன்** என்கிறார்கள். வீட்டைவிட்டு வெளியேவருவோம். ஆம். அதே ஊருக்குள் தான். அவர் ஒரு **செட்டியார்** என்கிறார்கள் அந்த ஊர்க் காரர்கள்.

சரி. செட்டியார்களைக்கேட்போம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? அவர் தான் '**க. தி.**' என்கிறார்கள். அதைவைத் துக் கொண்டு கற்பனையாளர்களைக் காண் போமானால் அவர்கள் '**க**' என்றால் கம்பன், '**தி**' என்றால் திருவள்ளுவன்; வாழ்வின் இலக்கியம் கம்பன், வாழ்வின் இலக்கணம் வள்ளுவன்; அந்த நூற்பெரும் பாற்கடலுள் படிந்தவர் பண்டிதமணி; எனவே அவர் தான் தமிழ்நாட்டின் '**கதி**' என்கிறார்கள்.

**பண்டிதமணி** வாழுகின்ற வீட்டையும், ஊரையும்விட்டு வெளியே வந்தால் புலவர் கள் கண்ணுக்குப் படுகிறார்கள். எங்களுள்

அவர் (பண்டிதமணி) **முதுபெரும்புலவர்** என்கிருர்கள்.

இருக்கட்டும். பண்டிதர்களே, என்னசொல்கிறீர்கள்?

அவரா? அவர் எங்கள் **மணி** யல்லவா? என்கின்றனர்.

அரசியலாரோ **மகாமகோபாத்தியாயர்** என்றனர்.

தாய்தந்தையர், ஊர்க்காரர்கள், செட்டியார்கள், கற்பனையாளர்கள், புலவர்கள், பண்டிதர்கள், அரசியலார் என்ற இவர்கள் போகப் பாக்கி நிற்பவர்கள் **பல்கலைக் கழகத்தார்**. அவர்கள் என்ன நினைக்கிருர்களோ, அதை எப்பொழுது சொல்ல இருக்கிருர்களோ நம்மால் அறிவதற்கில்லை.

இப்படிப் பலர் பலவாறு கூறினலும் தமிழ்மக்கள் நாவில் தழும்பேறிய பெயர்

பண்டிதமணி என்பதுதான். மாண்புமிக்க செட்டிநாட்டரசர் ஒருகால் பண்டித மணியை வைத்துக் கொண்டு ஒருவரிடம் அவர்களைக் குறிப்பிட வேண்டிய சமயம் வந்தபோது "எப்படி யிருந்தாலும் *பழைய பட்டம்தான் தழும்பேறித் தடையின்றி வரு கிறது" எனக் கூறியது நினைக்கத் தக்கது.

தமிழ்நாட்டார் இங்ஙனம் பண்டிதமணி யைப் பல்வகைப்பட்ட பெயர் வடிவில் காணுகின்றனர்.

> இல்வாழ்க்கையிலும் இனிமை, உடையிலும் இனிமை, ஊணிலும் இனிமை, பேச்சிலும் இனிமை, மூச்சிலும் இனிமை, எழுத்திலும் இனிமை, குழுவிலும் இனிமை, இவர் பிறரைப் புகழ்வதிலும் இனிமை, இகழ்வ திலும் இனிமை.

---

* பழைய பட்டம்—பண்டிதமணி
புதிய பட்டம்—மகாமகோபாத்தியாயர்

எனப் பண்டிதமணியை இனிமை வடிவில் காணுகிறார் அறிஞர் மீனாட்சி சுந்தரனார்.

(தெ. பொ.)

● காவியங்களைக் கடலுக்கு ஒப்பிடலாம். அக்கடலுள் மூழ்கி முத்தெடுப்பவர்தான் பண்டிதமணி. அக்கடல் கண்டாரும் அதன் கரை கண்டாரும் அவரே யென்பது நாடறிந்த ஒன்று.

அழுத்தமான சைவப் பற்றும் அதைவிட அதிகமான கடவுட்பற்றும் உடையவர் பண்டிதமணி. வாழ்க்கையில் சிக்கனத்தை அவர் நிலையில் அவரளவு மேற்கொள்பவர் மிகச் சிலர் தான்.

அவர் எந்தப் பொருளும் வீணாகப்போக விரும்பமாட்டார். தமக்கேனும் அன்றிப் பிறர்க்கேனும் அவை பயன்பட வேண்டுமென்ற கருத்துடையவர். இந்நீர்மைக்குப் பண்டிதமணி இளமைதொட்டு ஆளாயினர்.

சோழநாட்டில் ஒரு ஊர். அவ்வூருக்குப் பண்டிதமணி சொற்பொழிவாற்றப் போயிருந்தார். பலர் அவரை வெறுங்கையுடன் காணவிரும்பாமல் எலுமிச்சம்பழத்தில் சிலவற்றைக் கொண்டு வந்தனர். அதை அவரிடம் கொடுத்து அளவளாவினர். இப்படிக் கொண்டுவந்து கொடுத்த பழங்கள் மிகுதியாகச் சேர்ந்துவிட்டன. அவைகளை யெல்லாம் அவர் என்ன செய்திருப்பார் என அறிந்து கொள்ள விரும்புவதுஇயற்கையே. அவைகள் ஊருக்குக் கொண்டுவரப்பட்டு ஊறுகாய் போடப்பட்டன என்ருல் சிக்கனம் அறியாத சிலர்க்கு நகைப்பாகவும், சிறிது வியப்பாகவும் தோன்றலாம்.

● பழமைக்கும் புதுமைக்கும் இடையில் வாழ்பவர் பண்டிதமணி. பழங்காலத்து நாட்டுக்கோட்டைச் செட்டியார்களைப் போலவும் இக்காலத்து இளைஞர்களைப் போலவும் இல்லாமல், கிராப்பா–இல்லையா

என்று காண்பார் முடிவுகட்ட முடியாத நிலையில் காணப்படுகிறார்.

● பண்டிதமணி இடையறாது நகைச்சுவையைக் கொட்டுபவர். அவர் பேச்சில் பயனில்சொல் காணுதலரிது. அவர் அண்ணாமலை நகரில் மாலைப்பொழுதில் உலாவப் போவார்; ஒற்றை மாட்டுவண்டியில்தான். வண்டியில் ஏறிவிட்டால் பிறரோடு பேச மாட்டார். வண்டியில் ஏறிவிட்டால் ஏன் பிறரோடு பேசுவதில்லை என்று நான் ஒரு முறை அவரைக்கேட்டேன். அதற்கு அவர் கூறிய விடை மிக ரசமாயிருந்தது. மாடு புதியது; ஓட்டுபவனும் அப்படித்தான். அதிலே என் கவனம் செல்கிறது. வண்டிக்காரன் மாட்டை ஓட்டுகிறான். அவனை நான் ஓட்டுகிறேன் என்றார்.

நாக்கில் நீரூறுமாறு பக்குவம் சொல்லுவார். அவர் சொல்லிலேயே பக்குவத்தின் நறுமணம் வந்துவிடும். நல்ல சுவையான உணவு

களை உண்பதில் மிக விருப்பமுடையவர். ஒருகால் வீரசைவ மடம் ஒன்றில் நடந்த விழாவிற்குச் சென்றிருந்தோம். விழாத் தலைவர் பண்டிதமணிதான். இரவு உணவிற்குப் பிறகு உணவு எப்படியிருந்தது என்றார். சோறுபோதிய அளவு வேகவில்லை; கறியும் அப்படித்தான் என்றேன். ஆமாம். உணவெல்லாம் வீர சைவமாகத்தான் இருந்தது என்றார். அவ்வளவு காரமாகவும்இருந்த தென்பதைக் குறிப்பாற் புலப்படுத்தினார். மடமும் வீரசைவம். அங்கு சமைத்த உணவும் வீரசைவம் என்று கூறியது எவ்வளவு நகைச்சுவை உடையது! இங்ஙனம் நகைச் சுவை மிகுதியும் உண்டு.

ஒருவர் தாம் பாடிய தேவாரத்திற்குச் சிறப்புப்பாயிரம் தரவேண்டுமெனப் பண்டிதமணியிடம் கேட்டார். சிறப்புப்பாயிரம் தரப் பண்டிதமணிக்கோ விருப்பமில்லை. தராவிட்டால் அவர் மனக்குறைக்கு ஆளாக

வேண்டும். இந்த நிலையில் பண்டிதமணி அவரிடம் பேசியது மிக ரசமாக இருந்தது.

தேவாரம் வந்த முறையிலேயே தாங்கள் பாடிய தேவாரமும் வரவேண்டு மென்ருர் பண்டிதமணி. புதிய தேவாரம் பாடிய அவர் தேவாரம் எப்படி வந்தது என்ருர். "முதலில் நீங்கள் பாடிய தேவாரத்தை ஒரு பழைய அறையில் வைக்கவேண்டும். நீங்கள் பாடிய தேவாரத்தின் சுவையை முதலில் கறையான் சுவைக்கவேண்டும். அது சுவைத்து எஞ்சிய பகுதிதான் உண்மையான தேவாரம். பழைய தேவாரம் அப்படித்தான் வந்தது. அந்த முறையிலேயே தங்கள் தேவாரமும் வருவதுதான் சிறந்தது. அப்படி வந்தால்தான் அதற்குள்ள பெருமை தங்கள் தேவாரத்திற்கும் அமையும். பிறகு நான் சிறப்புப்பாயிரம் தருவதில் எந்த ஆட்சேபனையும் இராது" என்ருர்.

கேட்ட பேர்வழி அந்தக் காரியத்தைச் செய்கிறாரோ அல்லது பண்டிதமணியின் கருத்தைஅறிந்தாரோதெரியவில்லை.ஏனென்றால் அவர் இதுவரையிலும் சிறப்புப் பாயிரத்தின் பொருட்டுப் பண்டிதமணியை வந்து சிரமப்படுத்தவே இல்லை.

● சொற்சாதுரியம் மிகுதியும் உடையவர் பண்டிதமணி. அதை ஒரு கலையென்றால் அதில் அவர் நிகரற்றவர் என்றுதான்சொல்ல வேண்டும். அவரது வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகளில் இவ்வாற்றலைப் பலர்கண்டு மகிழ்ந்ததுண்டு.

> இவர்களுடைய அறிவையும் பெருமையையும் சிறப்பாக விளக்குவது இவர்களுடைய அருமையான சொற்சாதுரியந்தான்.

என்று மாண்புமிக்க செட்டிநாட்டரசர் ஆழ்ந்துணர்ந்து கூறியமொழிகள் நினைவு கூரத்தக்கன.

தமிழைக் குறைவுபடுத்தியோ தமிழ்ப்படித் தவர்களை மதியாமலோ பிறரால் பேசப் படுமானல் பண்டிதமணி வன்மையாக ஆனல் மென்மைமுலாம் பூசி நாகரிகமாகக் கண்டிப்பார்.

பலரால் போற்றப்படும் ஒருவர், பண்டித மணியை ஒரு விழாவில் அறிமுகப்படுத் தும்போது அவர் ஒரு பெரிய பண்டிதர் என்று கூறினர். பண்டிதர்கள் இலக்கணத் தைக் கூறி மூளையைக் குழப்பிவிடுகிருர்கள். நான் பயின்ற காலத்தில் நன்னூலைப்படித்து ஆலைக்குள் அகப்பட்ட கரும்புபோலாகி விட்டேன் என்ருர். அதோடு மட்டுமல்ல, இலக்கணம் இன்றியமையாததல்ல என்ற கருத்திலும் பேசி முடித்தார்.

அச் சொற்கள் பண்டிதமணியை மனம் வருந்தச் செய்திருக்கும் என நினைத்த சிலர் எண்ணமும் பழுதுபடவில்லை. எழுந்தார் பண்டிதமணி. என்னை அறிமுகப் படுத்திய

நண்பர் நன்னூல் படித்து ஆலைக்குள் அகப்பட்ட கரும்புபோல் ஆகிவிட்டேனென்று தாம் பட்ட துன்பத்தை எடுத்துக் கூறினார். நாமெல்லாம் செய்த தவந்தான் அவர் நன்னூலோடு நின்றது. அதற்கு மேற்பட்ட தொல்காப்பியம் போன்ற பெரிய இலக்கணங்களில் கைவைத்திருப்பாரானால் ஆளே போய்ச் சேர்ந்திருப்பார். முன்பு செய்த நம்முடைய தவம் தன் வலிமையினால் அவரை நன்னூலோடு நிறுத்தியது என்றார். அஞ்சாது கூறினார் என்று அங்கு யாரும் வியக்கவில்லை; அழுத்தமாகக் கண்டித்தார் என்றுதான் சொன்னார்கள்.

பண்டிதமணியுடன் பேசும்போது விழிப்பாக இருக்கவேண்டும். கவர்பட்ட பொருளில் பேசுவார். நம் திறமையை அறிய அவர் அங்ஙனமெல்லாம் முயல்வதுண்டு.

அரியக்குடி ஒருவைஷ்ணவஸ்தலம். காரைக்குடிக்கு அருகாமையிலுள்ளது. அங்கு

பண்டிதமணி தம் நண்பரொருவரைக் காணச் சென்றிருந்தார். அந்நண்பர் தம் இல்லத்தில் சுவையான உணவு செய்து அன்றிரவு பண்டிதமணியை உபசரித்தார்.

உணவிற்குப் பிறகு பண்டிதமணியைக் காணப் பலர் வந்திருந்தனர். அவர்களுடன் அளவளாவிக்கொண்டிருந்தார் பண்டித மணி. அப்பொழுது வேலைக்காரன் ஒருவன் பால் கொண்டுவந்து கொடுத்தான். கொடுத்த பொருள் இன்னது என்று அங்கிருந்த பலர்க்குத் தெரியும். அதை வாங்கிய பண் டிதமணி "திருப்பாற் கடலில் சீனிவாசன் துயில் கொள்ளுகிறான்" என்றார். அதைக் கேட்ட சிலர் புன்முறுவல் காட்டினர். சிலர் அதுவும் செய்திலர். அவர்களைச் சொல்லக்குறையொன்றும் இல்லை. தெரியா ததைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ள அவர்கள் விரும்பாதது நல்லதுதான். ஆனால் ஒருவர் மட்டும் தமக்குத் தெரிந்ததாகக் காட்டிக்கொண்டார்.

அவர் சுவரில் காணப்பட்ட பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலின் படத்தைப் பார்த்தார். அவ் ஓவியத்தில் ஈடுபட்டு மிக நன்ருக இருப்பதாகப் பண்டிதமணியிடம் அதைக் காட்டிக் கூறினர். பண்டித மணி எதைக்கருத்தில் வைத்துக்கொண்டு பேசுகிருர் என்பதை உணர்ந்த ஒரு சிலர் 'கொல்' லென்று சிரித்தார்கள். படத்தைக் கண்டுவியந்த நண்பர்க்கு ஒன்றும் புலனுக வில்லை. தாம் ஏமாந்ததாக நம்பினர். அவரை நோக்கி மிக அமைதியாகப் பண்டிதமணி "பாலில் எறும்பு கிடக்கிறது" என்ருர். அங்கிருந்த பலரும் இன்னும் அதிகமாகச் சிரித்தார்கள். திருப்பாற்கடல்–பால்; சீனி வாசன்–சீனியில் விரும்பி வாசம் செய்பவஞகிய எறும்பு. பாலில் எறும்பு கிடக்கிறது என்பதனைத் தெளிவாக உணர்ந்த நண்பர், 'ஊரும் அரியக்குடிதான்' என்ருர். ஒரே நகைச் சுவை.

● சொற்போர் செய்திருக்கிறார் பண்டித மணி. 'அவரைப் பிறரே அதற்கு ஆளாக்கினர். தம்கருத்தை அழுத்தமாகக் கூறி நிலை நாட்டும் வன்மை அவர்பால் மிகுதியும் உண்டு. பேரறிஞர் ஒருவரோடு கருத்து வேறுபாடு மலையெனத் தோன்றியது. அவ் அறிஞர் 'ஆறுவது சினம்' என்பதை மறந்து கடுஞ்சினங்கொண்டு பேசினர். பேரவையில் பண்டிதமணி பேசியனவும், அங்கு நடந்து கொண்டனவும் இன்றும் பலரால் சொல்லிப் பாராட்டப்படுவதை நான் நன்கறிவேன். அப்பொழுது பண்டிதமணி,

"உங்கள் வாதத்திற்கு அஞ்சவில்லை. ஆனால்
உங்கள் சினத்திற்கு அஞ்சுகிறேன்."

என்றார். சபையிலிருந்த பலரும் கடலொலியும் பின்னடையக் கையொலிசெய்து இவர் தம் மதிவன்மையைப் பாராட்டினர்.

● பண்டிதமணியின் பெருங்கல்வி பிறரை அஞ்சுமாறு செய்வதுண்டு. ஏன்? செய்து

மிருக்கிறது. வாக்குவளமுள்ள சிலரும் அவரோடு பேசுங்கால் நாக்குளறி, சொல் தவறி— அல்ல, சொல்லை விழுங்கி அல்லற் படுவதைச் சிலர் அறிவர்.

> மகிபாலன்பட்டி மகாமகோபாத்தியாயப் பண்டிதமணி கதிரேசன் செட்டியாரென்ருல் தமிழ்நாட்டில் அழுதபிள்ளை வாய் மூடாது; அதுபாட்டுக்கு அழுதுகொண்டு தானிருக்கும். ஆனால் தமிழறிஞர் தமிழன்பர் குழாங்களில் மேற்படி பெயரைக் கூறிஞல் உடனே மரியாதைக்குரிய நிச்சப்தம் உண்டாவதைக் காணலாம்.

என்று "கல்கி" ஆசிரியர் எழுதியது பண்டிதமணியின் வாழ்க்கையில் அமைந்த ஒரு உண்மைதான்.

● தாய்மொழிப் பயிற்சியின் இன்றியமையாமையைப் பற்றிப் பண்டிதமணியின் கருத்தைத் தமிழ் மக்கள் பின்பற்றுவார்களாக.

நமக்குரிய நாட்டு மொழியைப்புறக்கணித்து வேற்று மொழியில் எத்துணைமேற் சென்று லும் மொழியறிவாற்பெறும்பயன் முற்றும் பெற்றதாக மாட்டாது. இங்கிலையில் நாம் இன்றியமையாது பயில வேண்டுவது நமக் குரிய தமிழ் மொழியே யாகும்.

நல்ல ஆழமான கருத்து. முதிர்ந்த அனுபவத் தில் மலர்ந்தது. எனவே மணம் மிகுதி.

● பண்டிதமணியின் எழுத்தும் சொல்லும் தொடுமிடந்தொறும் சுவைநலங் கனிந் திருப்பதைப் பலர் அறிதல்கூடும். உரை நடையில் இயல்பான ஒருவகை இனிப்புச் சுவை உண்டு. ஆற்றொழுக்கான நடை யொழுங்கும் ஆழ்ந்த கருத்தழகும் காண்பார் அறிவுக் கேற்ப விரிந்து கொடுக்கும் பொருள் நலமும் ஒருங்கே அமைய எழுது வதை உணரலாம்.

(கல்வி) நங்கையைப் பண்புடன் வேட்ட
காதற் கொழுநனும் கலைவல மணமகன்
அந்தநங்கை நலமெலாம் நன்னர் நுகர்ந்து
புலம்நிரம்பி இன்பம் பொருந்திய வாழ்க்
கையில் தலைப்படுங்கால் அவ்விருவர்தம்
இரண்டற்ற தன்மையில் எழுந்த இன்ப
நிலையே உருவெடுத்தாங்கு மழவிளம் பாடற்
குழவிகள் தோன்றும்.

கல்வியைத் தாயாகவும், அத்தாய் பெற்ற சேயாகக் கவியையும் கூறிய கருத்தழகு நம் நெஞ்சை விட்டகலா நீர்மையது.

ஒரு காலத்தில் பண்டிதமணியினுடைய எழுத்திலும், பேச்சிலும் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் காணப்பட்டன. முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் பண்டிதமணி,

"வைசிய மக்களாகிய நாம் நமது பூர்வா
சாரங்களினின்றும் பிறழ்தலின்றி துவிஜத்
வம் உடையராய் இருப்போமாயின் வேதத்
தைத் தடையின்றிப் படித்தற்கு அதிகாரி
களாவேம்."

என்று பேசினர். வைசியர், பூர்வாச்சாரம், துவிஜத்வம், வேதம், அதிகாரிகள் முதலிய

சொற்கள் தடையின்றி வந்தன. அதே பண்டிதமணி யவர்கள் முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு,

> உருக்கரந்த நூல்களினின்றும் சிதறுண்டு அங்கு மிங்கும் காணப்படும் சில செய்யுட் களைப் பார்க்குங்கால், முழுஉருவம் காணப் பெருமை, தமிழரின் தவக் குறை என்றே இரங்கவேண்டியதாயிற்று. சேர, பாண்டியர், சோழர்களாகிய மூவேந் தர்களையும் தனித் தனியே மூவாயிரம் வெண் பாக்களால் புகழ்ந்து பாராட்டும் முறை யில் அமைந்த முத்தொள்ளாயிரச் செய்யுட் களில் சிதறிக்கிடந்த சிலவற்றைக் கண்டதும் அந்நூல் முற்றும் பெருமை பற்றி என் மனம் வருந்தியதுண்டு. சிற்றுருவமாகிய வெண்பாவில் உயர்ந்த பொருள்களைச் செப்பனிட்டு அமைத்துச் சொல்வளமும் பொருள் வளமும் கெழுமப் பாடியிருக்கும் வனப்பு தமிழ்ச் சுவைநலம் துய்ப்பார் யாவருள்ளத்தையும் கவர வல்லதாம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாத் தலைமை உரையில் இங்ஙனம் காணப்படு கிறது. தமிழின் தூய்மையில், தனிமையில் பெருநோக்கு உடையவர் பண்டிதமணி.

தனித்தமிழில் பேசுவதையும் எழுதுவதை யும் அவர் மறுத்தது கிடையாது. தனித் தமிழ்நடை கலப்பினும் சிறந்தது என அவரே கூறியிருக்கிறார்:

> சுவையுடைமை அவ்வம் மொழிகளில் தனி நிலைமையில் காணப்படுதல் போல் கலப்பில் காணப்படுதல் அரிது. ஒரு மொழி யில் செவ்வனம் பயின்று சுவை நிலை கண்டுணர்வார்க்கு அதன் தனி நிலையிற் போலப் பிற மொழிக் கலப்பில் அத்துணை இன்பம் உண்டாகாதென்பது உண்மை அனுபவம் உடையார் எல்லார்க்கும் ஒத்த தாகும்.

வடமொழி பயின்றோரில் இங்ஙனம் துணிந்த நிலையில் தம் கருத்தை எடுத்துக் கூறிய பெருமை பண்டிதமணி அவர்கட்கு உரிய தாகும்.

தமிழ் வடமொழியினின்றும் தோன்றி யது என ஒரு சிலரால் ஒரு காலத்தில் கூறப் பட்டதுண்டு. வடமொழி ஒன்றே வல்ல சில ரும் அக் கருத்துக்கு ஆதரவாயிருந்தனர்.

அங்கிலேயில் ஆரியமும் அருந்தமிழும் வல்ல பண்டிதமணியார் கூறிய பொன்மொழிகள் தனித்தமிழ் வேண்டுபவராலும் தமிழாக்கம் விரும்புவோராலும் என்றும் நினைவு கூரத் தக்கன.

> இது (தமிழ்) மற்றெரு மொழியினின்றும் தோன்றிய தென்றுதல் பிறிதொன்றன் சார் பின்றி நடைபெறு தென்றுதல் கூறுவார் உண்மை ஆராய்ச்சி இலராவர்.
>
> ஒரு சில வட சொற்கள் உண்மை பற்றித் தமிழ் மொழியை வடமொழியினின்றுந் தோன்றிய தென்றல் பொருந்தாத ஒன்றும்.

எனச் சினவாது அவர்தம் சிறுமை காட்டித் தம் கருத்தைக் கூறுவாராயினர்.

● பாடலொன்றை எடுத்துக்கொண்டு நுண்பொருள் காண்பதில் தன்னிகரற்றவர் பண்டிதமணி. தம் புலமைக்கண்கொண்டு பாடலில் வரும் ஒவ்வொரு சொல்லையும் காண்பர். சொற்களின் கருத்தைத்தொடர்பு படுத்துவர். அச் செய்யுளை எத்தனையோ

வகையில் அழகுபடுத்தி விடுவார். மொழி கையாளப்பட்ட சிறப்பைச் சொல்லும் போது சுவை ததும்பும். பாடலில் வருகின்ற பல சொற்களிருக்க இன்ன சொல்லில் இப் பாடலின் உயிர் நிலை இருக்கிறதென்று எடுத் துக்காட்டும் வித்தகப்புலமை விழுமியது; மிக விழுமியது. சுவையற்ற பாடலுக்கும் சுவை ஊட்டும் மதிவன்மை இவர்பால் மிகு தியுமுண்டு. பலர் கூறிய பாடல் பண்டித மணியால் கூறப்படும்போது புதுமெருகு டன் வெளிவரக்காணலாம்.

1941ல் சென்னையில் நிகழ்ந்த குறுந்தொகை மாநாட்டில் இவர்கள் செய்த தலைமையுரை யும், சிறப்பாக அந்நூலின் கடவுள் வாழ்த் தாக அமைந்த 'தாமரைபுரையும் காமர் சேவடி' என்ற செய்யுட்குக்கூறிய விரிவுரை யும், 'கா! தன்மை கண்ணுளே கரந்து, கண்ணெனும் தூதினால்' எனத்தொடங் கும் சிந்தாமணிப் பாடலுக்கும், 'கண்ட னன் கற்பினுக்கணியைக் கண்களால்' என்ற

இராமாயணப் பாடலுக்கும் கூறும் நுண் பொருள்களும் பயில்வோருள்ளத்தைப் பல் லாற்ருனும் இன்புறுத்துவனவாகும்.

'வர்ணனைகள் வெறும் சொல்லடுக்குகள்; அன்றியும் அவைகள் கருத்தை எளிதில் மறக்கும்படி செய்கின்றன' என்ருர் இக் காலத்துச் சிலர். இவற்றைப் பண்டித மணி ஒப்பினரில்லை. தாம் செய்யும் விரிவு ரைகளில் இக்கருத்தைக் கண்டித்தார். வர் ணனைகள் சொல்லடுக்குகளல்ல; ஆழ்ந்த பொருள் நலமுடையன எனப் பல இடங் களினின்றும் எடுத்துக்காட்டினர். சிலப்பதி காரத்தில் கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிகிற கட்டம். மிகவும் சோகரசமான கட்டந்தான். இனி மீண்டும் அவன் அவளைச் சந்திக்கப் போவதே யில்லை. அந்த இடத் தில் கவியே கோவலனுகிக் கண்ணீர் விடுகிருர். 'நான் பிரிகிறேன் என்று வருந் தாதே' எனத் தேற்றுகிருன் கோவலன். அப்பொழுது,

பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி

என்று பலவாறு சொல்லுகிருன். அவன் கூறிய மேற்கண்ட சொற்கள் வெறும் சொற்களாக, சொல்லடுக்குகளாகப் பிறர்க்குத் தோன்றுகின்றன. புலமைக் கண்ணுல் காணும் பண்டிதமணிக்கோ எப்படித் தோன்றுகின்றன என்று காண்போம்.

முத்தே முழுநிலவே என்றெல்லாம் கூருது பொன்னே என்கின்ருன் கோவலன். பொன் நெருப்பிலிட்டுச் சுடச்சுடத் தூய்மையடையும். அதனுல் மாசு நீங்கி ஒளிமிகும். இது பொன்னின் இயல்பு. இதே நிலைதான் கண்ணகிக்கும்: கோவலன் பிரிவாகிய துயரம் மிகுதியாக வருத்துகிறது. அதனுல் கற்புச்சுடராக விளங்குகிருள் கண்ணகி. அதுகருதி 'பொன்னே' எனக்கூறினுன் கோவலன்.

கொடியே' எனப்பிறகு கூறுகிறான். கொடியின் இயல்பென்ன? அது பிறிதொன்றன் சார்பின்றித் தானே வளர முடியாதது. மற்றொன்றைப் பற்றுக் கோடாகக் கொண்டே வளருவது. மரத்திற்கு வரும் இன்பமும், துன்பமும், அதைப் பற்றிய கொடியையும் சார்வது போலக் கண்ணகியும் கோவலனை, வாழ்வில் வரும் இன்ப துன்பங்களிலெல்லாம் விட்டுப் பிரியாது நிற்பவள் என்பது தோன்ற 'கொடியே' என்று கூறப்பட்டது. கற்பின் சுடரே, கற்பின் வடிவே என்றெல்லாம் கூறாது, "கற்பின் கொழுந்தே" என்று பின்னர் கூறுகிறான். கொடியின் செழுமை எங்கே தெரியும்? கொழுந்தில்தான். இங்கேதான் ரசிகர் உள்ளத்தில் அரும்பி இருந்த சுவையுணர்ச்சியை மலராகத் தோற்றுவிக்கிறார் பண்டிதமணி. தண்ணீர் குறைந்தால்முதலில் வாடுவது எது? கொழுந்தன்றோ? எனவே, கற்பின் செழுமைக்கு இலட்சியப் பொரு

ளாகத் தோன்றுகிருள் கண்ணகி என்று இங்ஙனமாக அவர் சொல்லும்போது நாம் நம்மையே மறந்து விடுகிறோம்.

நம்முன் கண்ணகியும், கோவலனும் கண்ணும் கண்ணீருமாக வருகின்றனர். நம்மையும் கலங்கச் செய்கின்றனர். அவர் வாழ்வுத்துயருக்கு வருந்தி, அந்தோ எனக் கழிவிரக்கம் காட்டுகிறோம். இதெல்லாம் பண்டிதமணியின் மேதை. இவைகளின் மூலமாக வர்ணனைகள் பிறர் நினைப்பது போல வெறும் சொல்லடுக்குகளல்ல. பொருளாழமுடையன என்று எடுத்துக்காட்டிய இடங்கள் மிகப்பல.

● வடமொழி,தென்மொழிக் காவியங்களில் தோய்ந்தவர் பண்டிதமணி. அதுமட்டுமல்ல. தம்கனிந்த சொற்களால் பிறரையும் தோயச் செய்பவர்.

கதிரேசனர் காவியமானர்.
காவியம் அவராயிற்று.

என்று கூறுகிருர் திரு. வி. க. இரண்டறக்

கலப்பார். பிறரையும் அங்ஙிலயாக்கும் பேராற்றல் நன்கு கைவரப் பெற்றவர்.

> இவர் பேச்சைக் கேட்கும்போது கேட்போரும் ஒருமித்து அவரோடு பாட்டிற் சமாதி கூடிச் சாந்தி என்று புகழப்பெறும் மன அமைதியை அடைந்து வருவது கண்கூடு. அந்த வகையில் இவர் ஒரு மகரிஷி. ஒரு ஆச்சாரிய பீடம்.

எனக் கூறும் வாயிலாக இவரை ஒரு மகரிஷியாக்கி, இவர்க்கு ஒரு பீடத்தையும் அமைத்தனர் அறிஞர் மீனுட்சிசுந்தரனுர் (தெ. பொ.)

தமிழ் வடமொழி இலக்கியங்களை ஒப்பிட்டுப்பேசுவார் பண்டிதமணி. இரண்டிலும் கருத்தழகில் எது சிறந்தது என்று எடுத்துக் காட்டும்போது பலரதில் ஈடுபட்டுப் பாராட்டியதை நான் அறிந்ததுண்டு.

> இவர்கள் வடமொழி, தென்மொழிகளில் மிகப் புலமை வாய்ந்தவர்கள். அவற்றின் பேரிலக்கியங்களின் சொற்சுவை, பொருட்சுவைகளில் பலகாலும் தோய்ந்து தோய்ந்து இன்புறுபவர். அணிஇலக்கணங்களையும், சுவைநலங்களையும் நன்கு ஆராய்ந்து அனுபவிப்பவர். மகா கவிகளின் இருதயங்களை உளங்கொளக்கொண்டு தமது மொழி மதுகையாலும், சொல்வளத்தாலும் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் ஆற்றல் படைத்தவர்.

என்கின்றார் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர்.*

சுக்கிரநீதி, மிருச்சகடிகம், உதயணன் சரிதம், சுலோசனை முதலிய வடமொழி நூல்களைப் பண்டிதமணி தெள்ளத்தெளிந்த தீந்தமிழ் நடையில் தமிழாக்கியுள்ளார். இவ்வரிய நூல்களைப் படித்து மகிழ்ந்த

* தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் B.A. B.L.

சேதுநாட்டு வேந்தராகிய D. இராஜ ராஜேஸ்வர சேதுபதியவர்கள்,

அரிய பெரிய நூல்களை இதர வடமொழி முதலிய பாஷைகளிலிருந்து மொழி பெயர்த்து உதவுதல் தமிழுலகிற்குப் பேருப காரமாகும். அதிலும் தங்களைப் போன்ற கலைவல்லவர் இத்தகைய முயற்சியை மேற் கொள்ளுதல் மொழிபெயர்ப்பின் தகுதியை உயர்த்துவதாகும்.

[கடிதம் 20—4—09]

என்று பாராட்டும் வகையில் எழுதுவாரா யினர்.

ஒருகால் பண்டிதமணி வடமொழியிலுள்ள நீதிநூற் கருத்துக்களுடன் தமிழிலுள்ள நீதிநூற் கருத்துக்களை எடுத்துக்காட்டினார். கருத்துக்களின் சிறப்பும், சிறப்பின்மையும் தெளிவுபடுத்தப்பட்டன. வடமொழியில் 'அறத்தைச்செய்' என்று கூறப்பட்டிருக் கின்ற சுலோகத்தை எடுத்துவிளக்கினார்.

அறத்தைச்செய்ய ஒருவனிடம் பொருளில்லாமலிருக்கலாம். அதை நன்குணர்ந்து பொருளில்லையே என வருந்தாமல் அறத்தைச் செய்ய நீ விரும்பு என்ற பொருளில் **அறஞ்செய விரும்பு** எனத் தமிழ் நீதிநூல் எழுந்தது என்று எடுத்துக்காட்டினர்.

அவர் ஒருமுறை காரைக்குடிக் கம்பன் விழாவில் 'கம்பனும்-பாசனும்' என்ற பொருளில் தமிழ்க்கம்பனையும், வடமொழிப் பாசனையும் ஒப்புமைப் படுத்திப் பேசினர். வடமொழிப் பாசனைத் தமிழ்க் கம்பன் எங்கெல்லாம் விட்டு உயர்ந்த நிலையில்நின்று தோன்றுகிறன் என்று கூறியபோது தம்மை மறந்து தமிழில் ஈடுபட்டோர் பலராவர். சென்னையிலிருந்து வெளிவரும் ஒரு பிரபலமான வாரப்பத்திரிகையின் ஆசிரியர் அதைக் கேட்டு 'இந்தப் பேச்சு இவராலன்றி வேறு யாராலும் பேச முடியாதது' என்று கூறினர். அதுபோலத் தம் பத்திரிகையிலும் எழுதினர்.

தமிழோடு ஒத்த வடமொழிப் புலமை பண்டிதமணிக்கு உண்டு என்பது நாடறிந்ததுதான். என்றாலும் கீழ்வரும் கருத்து நாட்டினர் கருத்திற்கு நன்மணி சூட்டியது போல் காணப்படுகிறது.

> வடமொழியில் தெளிவுகுன்றிக் கிடக்கும் சில இடங்களில் இத்தமிழ் நூல் (மண்ணியல் சிறுதேர்) தெளிவு மலிந்து காணப்படுகிறது. இவற்றால் இது முதனூலிலும் மேம்பாடுடையதாகக் கருதற் பாலது.

இங்ஙனம் கூறியவர் இராமேசுவரம் வடமொழிக் கல்லூரித் தலைவர் சுப்பிரமணிய ஐயரவர்கள்.

● பள்ளிப் படிப்பும் பல்கலைக் கழகப் பட்டமுமின்றி ஒருபெரும் சர்வகலாசாலையின் தமிழ்ப் பேராசிரியராக வந்த பெருமாண்பு பண்டிதமணிக்குத்தான் உண்டு.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பண்டிதமணி பேராசிரியராகவந்து பன்

னூறு மாணவர்க்குத் தமிழறிவுறுத்தினர். இலக்கியச் சுவை நலத்தில் ஈடுபடச்செய் தாரும் இவரே. இதுவன்றி இப்பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ்ப்பகுதி, வரலாற்றுப் பகுதி, விஞ்ஞானப் பகுதி, ஆங்கிலப் பகுதி களிலுள்ள கலைநூற் புலமையாளராகிய அறிஞர் பலர்க்குச் சிலப்பதிகார வகுப்பு நடத்தினர். அவரெல்லாம் தமிழ் இலக்கியச் சுவைநலம் மாந்திப் பண்டிதமணி அவர் களின் மதிவன்மையைப் பாராட்டினர். தம்மை எல்லாம் பண்டிதமணியவர்களின் மாணவரெனக் கூறிக்கொள்வதுமுண்டு.

அவ் அறிஞர்கள் சிலப்பதிகாரப் பாடம் முடிந்ததும் ஒருவிழாவை நடத்தினர். அது போது தம் ஆசிரியராகிய பண்டிதமணி அவர்கட்குப் பரிசுப் பொருள்களும், பாராட் டுரைகளும் வழங்கினர். இங்ஙனமாகத் தமி ழறிஞர்களே யன்றி மேலைநாட்டுக் கலைநூற் புலமை மிக்க அறிஞர்கள் பலர் இவர்தம் தமிழ், வடமொழிப் புலமையைப் ப்யன்

படுத்திக் கொள்ளுகின்றனர். செட்டிநாட்டுக் குமாரராஜா பண்டிதமணியை மற்ெருவருக்கு அறிமுகப் படுத்துங்கால் இவர்கள் மாணுக்கர்களுக்கு ஆசிரியராக இருப்பதே யன்றி ஆசிரியர்கட்கும் ஆசிரியராக இருக்கிருர்கள் எனக் கூறியது நினைக்கத்தக்கது.

தமிழ்நாட்டுப் பண்டை அரசர் புலவர் தொடர்பை நினைவுறுத்தும் வகையில் செட்டிநாட்டரசரும் பண்டிதமணியாரும் பலர் கண்முன் வருகின்றனர். அரசர்-மணி தொடர்பு தமிழாக்கத்திற்குப் பேருதவியா தலைத் தமிழ்நாட்டார் நன்கறிவர்.

● பேசுதல், எழுதுதல், பிறர்க்கு ஆசிரியராயிருந்து கற்பித்தல் முதலிய புலமைக் கூறுகளுடன் செய்யுள் செய்தலிலும் பண்டிதமணி தனியாற்றல் படைத்தவர்.

> சங்கப்புலவரும் சைவச் சான்றோரும் சேர்த்து வைத்த செழும் பொருள் நிதியை ஈட்டி இயற்றி அவையறிந் தீயும் வண்மை சான்ற வணிகமணியாகிய, தமிழகம் போற்றும் பண்டிதமணி அவர்கள் இம் மொழி பெயர்ப்பினை [மண்ணியல் சிறுதேர்] நோக்கக் கவிமணி எனவும் விளங்குகிறார்கள்.

என விபுலானந்த அடிகளார் கூறுகின்றனர். அறிவுடையான்; திறலுடையான்; அளந்துரைக்கும் சொல்லுடையான்; நெறியறிந்து சூழும் பெருங் கொடையான் என்று செட்டிநாட்டரசரைப் பொங்கித் ததும்பும் கவியுணர்வோடு பாராட்டி வாழ்த்தும் பாடல் பண்டிதமணியின் பாடல்தான்:

> அறிவும் திறலும் அளந்துரைக்கும் சொல்லும்
> செறியப்படைத்த எங்கள் செம்மல்— நெறியறிந்து
> சூழும் பெருங்கொடையான் தில்லைச் சுடர் அருளால்
> வாழியர் அண்ணு மலை.

● திருவாசகத்திற்கு மரபு பிறழாமல் நுண் பொருள் கூறுவதில் தமிழ்நாட்டிலே தலை சிறந்தவர் பண்டிதமணி என்பது அறிஞர் கண்ட ஒருதலையான முடிபாகும்.

> பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களை முதல் முதல் பேசக்கேட்டது இருபது வருஷத்திற்கு முன். திருவாசகத்தின் பெருமைதான் விஷயம். பாசுரத்தின் உள்ளக்கிடக்கையில் திளைத்து பரவச நிலையில் நின்று பேசினார்கள். இது சாதாரணமாகச் சாத்தியமாவதல்ல.

இங்ஙனம் கூறியவர் ரசிகர்மணி டி. கே. சி அவர்கள். அவர்கள் கூறியதில்வியப்பொன்று மில்லை. ஜஸ்டிஸ் சதாசிவஐயர் ஒரு முறை காரைக்குடியில் திருவாசகச் சொற்பொழிவைக் கேட்டு அதில் மிகவும் ஈடுபட்டு அந்த மயக்கத்தில் பண்டிதமணி இசையோடும் பாடுகிறார் என்று கூறியதில்தான் வியப்பமைந்திருந்தது.

திருவாசகச் சொற்பொழிவைக் கேட்ட தமிழன்பர் பலர் இவரது விரிவுரையமைந்த திருவாசக வெளியீடொன்றை எதிர்பார்க்கின்றனர். திருவருள் அதை அணிமைப் படுத்துவதாக.

● இலங்கை நாட்டில் பண்டிதமணிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு மிகச் சிறந்தது. சமயத்தைப் பற்றியும், மொழியைப்பற்றியும் இவர் பேசியன இலங்கைத் தமிழர்க்கு எல்லையில் மகிழ்ச்சியைத் தந்தன.

> செட்டியாரவர்கள் யாழ்ப்பாண மக்கட்குத் தாம் அரிதிற் கற்றுணர்ந்த கலாஞானத்தை ஊட்டி ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தச் செய்வார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. பண்டிதமணி அவர்கள் வரவு நல்வரவாகுக.

*[ஈழகேசரி 9-4-1933.]*

என்று அந்நாட்டுப் பத்திரிக்கைகள் நல்வரவு கூறின.

தமிழ்நாட்டுப் பெரியார்களில் பெரியோராகிய பண்டிதமணி அவர்களை வரவேற்று உபசரிப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம். இப் பெரியாரை வரவேற்கும் சிறந்த இவ் விழாவில் என்னுரிமைகொண்டு நானும் கலந்துகொள்ள விரும்பினேன்.

யாழ்ப்பாணத்தில் பண்டிதமணி அவர்கட்குச் சிறிதும் ஓய்வில்லை. காலையிலும், மாலையிலும் இடைவிடாது சொற்பொழிவு நிகழ்த்திய வண்ணமாகவே இருந்தார். மேனாட்டுக் கல்வி பயின்ற பல இளைஞர்கள் பண்டிதமணி அவர்களை வரவேற்று, உபசரித்து, அவரது சொற்களைக் கேட்க ஆவலுடனிருந்தனர்.

[தினகரன் 1933 ஏப்பிரல் 2]

என்று விபுலானந்த அடிகள் நல்வரவுகூறி வரவேற்றுப் பேசினர்.

இலங்கையில் பண்டிதமணி தங்கிய நாட்களில் பலநாள் திருமதி இராமநாதனின் (சர். P. இராமநாதன் மனைவி) விருந்தினராகவே தங்கினர். பண்டிதமணியை அழைத்த திருமதி இராமநாதன் தம் இல்

லத்தில் அவரை வரவேற்ற முறை வியப் பமைந்ததாகும். அமெரிக்க நாட்டில் பிறந்து வளர்ந்து, அந்நீர்மையில் பலநாள் வாழ்ந்த அம்மையார், தம் இல்லத்தின் தலைவாயிலில் குத்துவிளக்கு, நிறைகுடம், நாண்மலர், அகிற்புகை முதலிய மங்கலப் பொருள்களமைத்து வரவேற்ற கோலம் பண்டிதமணிக்கே வியப்பாக இருந்தது. அன்றியும், திருநீறு அணிந்த சைவ சீலத் துடன் அம்மையார் இவர்களது திருவாசகச் சொற்பொழிவைக் கேட்டு மிக மகிழ்ந்தனர். எனினும் ஒருவகையில் வருந்தினர். அவ் வருத்தம் தம் கணவராகிய சர். P. இராம நாதன் உடனிருந்து கேட்கமுடியவில்லையே என்பதாகும்.

இராமநாதன் வித்தியாலயத்தில் பண்டித மணியை வரவேற்ற சர். P. இராமநாதனின் மருகர் திரு. நடேச பிள்ளை மணியை* ஈழத்தில்தான் பதிக்கவேண்டும்.

* ஈழம்—பொன்

என்றார். மணி ஈழத்தில் ஒளிகால்வது இயல்பு என்று அவர்கூறியபோது அத்தனை மக்களும் ஆரவாரம் செய்தனர்.

● சென்ற கால்நூற்றாண்டுக்கு மேலாக எத்தகைய வெற்றாரவாரமுமின்றி அடக்கமாகத் தமிழ்ப்பணியாற்றி வரும் (புதுக்கோட்டைத் தனியரசைச் சார்ந்த) மேலைச் சிவபுரிச்சன்மார்க்க சபையை உண்டாக்கியவரும், அது எந்நாளும் எத்தகைய ஊறுபாடுமின்றிப் பணியாற்றவல்ல நிலையில் ஆலோசனை கூறுவாரும் இவரே. பண்டிதமணி அச்சபையினிடத்து எத்துணைப் பேரன்புடையார் என்பதை அவர் கூறுவன கொண்டே அறியலாம்.

> எனக்கு இவ்வளவு சிறப்புச் செய்த அளவு யான் இச்சங்கத்திற்குத் தொண்டு செய்ததாக என் நினைவுக்கு வரவில்லை. யான் படித்தது எங்கே எங்கே எனப் பல அன்பர்கள் கேட்டார்கள். இங்கேதான்; யான்தான் இச்சங்கத்தின் முதல் மாணக்கன்.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபைமன்றத்தில்

மாண்புமிக்க செட்டிநாட்டு மன்ன ரவர்கள் பண்டிதமணியின் படத்தைத் திறந்து வைத்தபோது நன்றிகூறும் முகி மாகப் பண்டிதமணி இங்ஙனம் கூறினர்.

பண்டிதமணி என்ற பட்டம் இன்று புகழ் வடிவில் நிற்கும் மகாமகோபாத்தியாய, டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர் களால் மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபை ஆண்டுவிழாவில் அளிக்கப்பட்டது. சேது நாட்டுப் பெரும்புலவர் ரா. இராகவையங் கார் அவர்கட்கு 'மகாவித்துவான்' என்ற பட்டமும் அங்கேயே உடனளிக்கப்பட்டது. அப்போது பண்டிதமணி பேசியது அவரது புலமைநலத்தைத் தன்னுட்கொண்டு நின் றது. 'பேரறிஞர்களாகிய நீங்கள் எல்லோரும் ஒருங்குகூடி எனக்கொரு பெரிய பட்டத்தை அளித்திருக்கிறீர்கள். இந்தப்பட்டத்திற்கு நீங்கள் நினைப்பதுபோல அவ்வளவு உரிய வனுக என்னை நான் கருதவில்லை. தாய் தன் குழந்தையிடத்துள்ள பேரன்பு காரண

மாகத் தங்கக்கிண்ணத்தைக் கொடுக்கிறாள் அங்ஙனம் கொடுப்பதியல்பு. கிண்ணத்தை அந்தக் குழந்தை கைதவறிக் கீழே போட்டு விடாமல் அதுசெல்லுமிடந்தொறும்சென்று பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு தாயுடையதாக அமைகிறது. அதைப்போல நான் இப்பட்டத்திற்குரிய தகுதியினின்றும் தவறிவிட்டால் அங்கு, தாயாக நின்றுதாங்கி யருளும் பொறுப்பு உங்களுடைய தாகிறது.' என்று கூறியது எத்துணைச் சிறந்த கருத்து.

● **பண்டிதமணி கல்விபயின்ற காலம்** வசதியற்ற காலம். அச்சியந்திர உதவியால் வெளிப்போந்து உலாவும் அழகமைந்த நூற்கள் அருகியிருந்த காலம்.

ஏட்டில் எழுத்தாணிகொண்டு கல்வி பயின்றோர் மிகுதி. பிள்ளையைப் படி என்றால், பிள்ளையைக் கெடுக்கிறான் என்று புகார் சொன்னவர்களும் அந்தக்காலத்தில்தான் இருந்தார்கள்.

நெடுமால் திருமருகா நித்த நித்தம் இந் தெழவா என்று கல்வியில் சலிப்படைந்த மாணுக்கர் கதை நாம் கேட்டு நகைத்ததே.

பிள்ளையும் படிக்க வேண்டாம், பிரம்படி படவும் வேண்டாம், சள்ளையாம் சுவடி தூக்கிச் சங்கடப்படவும் வேண்டாம் என்று பல்லவி அநுபல்லவியாகப் பாடிய தாயும் தந்தையும் நிறையாண்டு வாழ்ந்த காலம்.

'நூறு நூருயிரம் அல்லது கோடி முற் றிற்று' என்று முற்றுப்புள்ளியின் பொருளை அறியாமல் திண்ணைப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் இசை போட்டுப் படிப்பார்கள்.

வாக்குண்டா? நல்ல மனமுண்டா? மாமல ராள் நோக்குண்டா? எனப்பிள்ளையாரையே அஞ்சாமல் கேட்ட பள்ளிப்பிள்ளைகளும், அவர்கட்கு அங்ஙனம் உபதேசம் செய்த பள்ளி ஆசிரியர்களும் மிக்கிருந்த காலம் அதுதான்.

எடுத்துக்காட்டாக ஒன்று காண்போம்: பண்டிதமணி திருக்குறளில் நாளொன்றுக்குச் சில குறள்களாக மனப்பாடம் செய்து வந்தார். அதைப் பிறரிடம் கூறிப் பிழையின்றிக் கூறுகிறேமா என அறிந்து கொள்ள விரும்புவார். தவருென்றுக்குக் குட்டு ஒன்ருகப் பேசிக்கொண்டு பெரியவர் ஒருவரிடம் தாம் மனப்பாடம் செய்தவைகளை ஒப்பித்தார்.

குறளில் முதலதிகாரத்து முதற்பாட்டு: 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி' என்ருர் பண்டிதமணி. உடனே அப்பெரியவர் "நிறுத்து 'அகர 'முதல வெழுத்தெல்லாம்' என்று இருக்கிறது. நீ எழுத்தெல்லாம் என்று பிழையாகக்கூறினுய். குனிதலையை" என்ருர். பாவம். பண்டிதமணி எத்தனை குட்டு வாங்கினுரோ, என்ன துன்பம் அடைந்தாரோ அது இதுவரையும் அறியப் படாத ஒன்று.

இதிலிருந்து அவர் கல்வி பயின்றகாலத்தையும் அக்காலத்தில் வாழ்ந்த சுற்றுச் சார்பினரையும் அறிந்துகொள்ள முடியும். சுருக்கமாகக் கூறினால் இப்படிப்பட்ட சூழலுக்கிடையில் தோன்றிய மணம் அரு நாண்மலர்; நீர் அருத்தண்சுனை; உவர்ப்பிலாப் பெருங்கடல் பண்டிதமணி என்னலாம்.

● [1] நாளிகேரபாகமாக இருந்தளத்தனையோ நூற்கருத்துக்களை நமக்குத் [2] திராக்ஷாபாகமாக ஆக்கித்தந்த பெருவண்மை பண்டிதமணிக்குத் தானுண்டு.

---

1 நாளிகேரபாகம்-மட்டை முதலியவற்றை உரித்து நீக்கி உட்புறத்துள்ள பருப்பைக் கடித்து மென்றுலன்றித் தேங்காயினது இனிப்பை அறிய இயலாதது போல் மிகவருந்தாது அழகை அறிய முடியாத செய்யுள் நடை வகை.

2 திராக்ஷாபாகம்-திராட்சை ரசம்போல அனுபவித்தற்கு எளிதான செய்யுள் நடை வகை.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனவரையர் எழுதிய உரையை இலக்கியமாகச் சொல்லும் பேராற்றல் அவர்க்கே உரியதென நாம் கூறுவதைவிடப் பிறர் கூறுவதைக் காண்போம்.

> பொருளுணர்ந்து சொல்லுதற்கரிய சேன வரையம் என்னும் தொல்காப்பியச் சொல் லதிகார உரையை மிக எளிதாகப் போதித் ததை அடுத்த அறையிலிருந்து கேட்கும் பாக் கியம் பெற்றவன் யான்.

என்று கூறியவர் வேறுயாருமில்லை; **மகா வித்துவான் இராகவையங்கார் தான்.**

● **வாழ்க்கையில்** அறுபத்திரண்டு கற்களைத் தாண்டியவர் பண்டிதமணி. அப்படியானல் பண்டிதமணி கிழவரோ என எண்ணலாம். அப்படியும் சொல்வதற்கில்லை. உள்ளுணர்ச்சியால் இளைஞராகவே காணப்படுகிருர். அவர் செய்யும் பிரயாணங்களையும், உலைவிலாச் செயலையும், அருகிருந்து காணும் யாரும் என்கருத்தை ஆதரிப்பர்.

அதை எல்லாம்விட அவர் வைத்துக் கொண்டிருக்கும் ஜவ்வாதுப் பொட்டே அவர் ஒரு இளைஞர் எனக்கூறுகிறது.

'பல்லுப்போனால் சொல்லுப் போச்சு' என் பார்கள். (பழமொழி) பண்டிதமணிக்குப் பல் இல்லாதது உண்மைதான். ஆனால் மற் றொன்று பொய்; பெரும்பொய்.

● உலகத்துப் பொருள்களை இரண்டு வகை யில் காணலாம். ஒன்று உண்மை,மற்றொன்று போலி. போலியை வன்மையாகக் கண்டிப் பவர் பண்டிதமணி. இது அவரது குணங் களுள் ஒன்று என்றால் உண்மைக்கு அவர் மதிப்புத் தருபவர் என்ற கருத்தில்தான். யாரையும் லேசில் விடுபவரல்ல.

ஒருவர் தமிழில் அது இல்லை இது இல்லை. என்று சிலவற்றைச் சுட்டிக் கூறினார். அந்த விழாவுக்குப், பண்டிதமணிதான் தலைவர். முடிவுரை என்ன சொல்லப் போகிறார் என

எதிர்பார்த்தோம். எல்லா மொழிகளிலும் எல்லாமிருக்க முடியாது என்ருர். சோர்ந்திருந்த பலர் நிமிர்ந்தனர். காதுகொடுத்துக் கேட்டனர். நம்முடைய தேவாரமும் திருவாசகமும் பிறர்க்குண்டா என்ருர். இல்லை என்பது இல்லையாக வேண்டும் எனத் தமிழூக்கம் தந்து பேசினர். ஆழ்ந்து ஆராய்ந்து பேசவேண்டுமென்று கூறுவார். இதுவே அவர் மதம் என்றுங் கூறலாம்.

● நுண்பொருட் சுவைகளைக் கூறிப் பிறரை இன்புறுத்துதலையே தம் வாழ்வின் நோக்கமாகவுடைய பண்டிதமணி தம்மிடம் நெருங்கிப்பழகும் மாணவர்களை 'என்ன அப்பன்' என்றுகூறுவதும், அடிக்கடி 'திறவுகோலெங்கே' என்று தம்மக்களை நோக்கிக் கேட்பதும் எழுத்தால் அறியமுடியாத சுவைகளாகும்.

● 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்' என்று தமிழ் வழங்

கும் எல்லையில் சுவர் எழுப்பிய தொல்காப் பியப்பாயிர ஆசிரியரும், 'நீலத்திரைக்கடல் ஓரத்திலே, நின்று நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை, வட மாலவன் குன்றம் இவற் றிடையே புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ் நாடு' என்று எல்லை அமைப்பின் நல்லழகில் ஈடுபட்ட பாரதியாரும்கூறிய தமிழ்நாட்டின் எல்லையினும் விஞ்சி நின்றது பண்டிதமணி யாரின் பெரும் புகழ்.

கன்னடத்தைத் தாய்மொழியாக உடைய மைசூர் நாட்டிலும், மலையாளத்தைத் தாய் மொழியாகவுடைய திருவாங்கூரிலும், கடல் கடந்த இலங்கை, பர்மா, மலேயா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் பண்டித மணி என்ற புலமைவித்தகப் புகழாளரை அறியாதார் மிக அரியர். 'புலவர் பெருமா ளுகிய பண்டிதமணியவர்கள்' எனச் செட்டி நாட்டரசர் கூறியதும், 'எங்களுக்கெல்லாம் ஞானுசிரியராக இருத்தற்குரிய பெருந்

தகைமை பண்டிதமணியின்பாலுண்டு' என்று நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறியதும்,

'வழிதிறந்தறம் வாழ்கெனக்கலே மன்றுதில்லேயுள்
[வைத்துயர்
விழிதிறந்தஅண் ணுமலேக்கொடை வேந்தர்
[மேதகை யின்பொருள்
மொழிதிறந்துபெய் புலவரிற்பெரு முதல்வன்.
[பண்டிதமணி* யுருக்
கிழிதிறந்தனன் மேலேநன் சிவபுரிக்கிசை கெழுமவே'

என்ற பாடலில் 'புலவரில் பெருமுதல்வன் பண்டிதமணி' என மகாவித்துவான் இராகவையங்கார் கூறியதும் எத்துணைத் தொடர்புடைன என்பதை அறிஞர் உலகம் நன்கறியும். பண்டிதமணியோடு மிக நெருங் கிப் பழகிய புலவர்கள் வித்தகத் தமிழ்ப் புலமை வேந்தர் எனக் கூறப்படும் சோழவந்தானூர் அரசஞ் சண்முகனர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், சுந்தரேச ஐயர் முதலியோராவர். இவருள் சண்முகனர் பண்டிதமணியின் ஆசிரியராவர்.

---

* உருக்கிழி-உருவம் தீட்டிய படம்.

'செந்தமிழும் ஆரியமும் முற்றவுணர் நுண்மதியான்
சீர்த்திச் சிந்து-வந்தமிழும் மாரிநிகர் வண்மையினன்'

என்று அரசஞ்சண்முகனரால் பாராட்டப் பட்ட ஒரு தமிழ்ப் பெரும் புலவர் தமிழ் நாட்டிலே பண்டிதமணி ஒருவர்தான்.

● நற்றவத்தால் தமிழன்னை பெற்றெடுத்த பெரும் புதல்வர் பண்டிதமணி. செல்வச் சூழலாகிய செட்டிநாட்டிலே சிற்றூரிலே பிறந்த பண்டிதமணியார் புலமை உலகத்திலே தலைமை பெற்று வாழுகிறார்.

தமிழ்நாட்டிற்குப் பண்டிதமணியார் செயற்கரிய பல செய்தார். அதனுல் பிறர் பெறற்கரிய பல பெருஞ்சிறப்பும் பெற்றார்; இன்னும் பெறுவார்.

பாண்டிய நாட்டில் கணியன் பூங்குன்றனார் என்னும் சங்கத்துச் சான்றோர் பிறந்த பூங்குன்ற நாட்டின் தலைநகராகிய மகிபாலன்பட்டியில், 1881 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் பிறந்தார்.

புலவராய், புரவலராய், இரண்டாலும் புகழாளராய் விளங்கும் பண்டிதமணி யார்க்கு, நான்கு ஆண்மக்களும் மூன்று பெண்மக்களும் இருக்கின்றனர்.

இவர்தம் விரிந்த புலமையைக் கண்ட பலர் இவர் கல்லாதன தமிழில் இல்லாதன என எண்ணுமாறு அமைந்தது இவர்களது தமிழறிவு.

பண்டிதமணியார்க்கு இரண்டில் விருப்பம். ஒன்று காவியம். மற்றொன்று காரமில்லாத உணவு.

நாவலர் பதிப்பகம், காரைக்குடி.